## ‘தேசிய கல்விக் கொள்கை எனும் மதயானை’ நூல் வெளியீடு!

# தேசிய கல்விக் கொள்கையின் தீமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்வோம்!

### பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலைதளப் பதிவு!

சென்னை, மே 8-

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் வலைதளப்பதிவு வருமாறு:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நான் எழுதியுள்ள “தேசியக் கல்விக் கொள்கை எனும் மதயானை” நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழை வழங்கி வாழ்த்துகள் பெற்றோம்.



ஒன்றிய பா.ஜ.க. அரசு சமஸ்கிருதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய தேசியக் கல்விக் கொள்கையை நம்மீது திணிக்கும் முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. ஆசிரியப் பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பெரும் பாதகத்தை தேசியக் கல்விக் கொள்கை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் “எக்காரணத்தைக் கொண்டும் அதனை ஏற்க மாட்டோம்” என உறுதியோடு எதிர்த்து வருகிறார்.

இக்கல்விக் கொள்கையை முன்னிறுத்தி நமக்கான கல்வி நிதியைத் தர மறுப்பது போன்ற அராஜகப் போக்கை ஒன்றிய அரசு கையில் எடுத்துள்ளது.

இச்சூழலில் தேசியக் கல்விக் கொள்கை உருவாக்கத்தில் ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவாத அமைப்புகளின் பங்களிப்பு என்ன? இதனால் ஆசிரியர்களுக்கு என்ன பாதிப்பு? ஏழை எளிய மாணவர்களை கல்வியில் இருந்து இது வெளியேற்றும் என ஏன் சொல்கிறோம்? என்பன போன்ற பொதுமக்களின் பல்வேறு கேள்விகளுக்கு மக்களில் ஒருவராக இருந்து விளக்குவது நமது கடமையாகும்.

இதன் விளைவாக “தேசியக் கல்விக் கொள்கை எனும் மதயானை” நூலினை தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளேன்.

வரும் 17-ஆம் தேதி அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் முதலமைச்சர் அவர்கள் இந்நூலினை வெளியிட்டு விழாப் பேருரையாற்றுகிறார்.

நாடாளுமன்ற நிலைக் குழுத் (கல்வி) தலைவர் மத்திய பிரதேச முன்னாள் முதலமைச்சர் திக்விஜய் சிங் அவர்கள் நூலினைப் பெற்றுக்கொள்கிறார்.

உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி கோபால கவுடா, இஸ்ரோ மேனாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

தேசியக் கல்விக் கொள்கையின் தீமைகளை மக்களிடம் எடுத்துச் செல்வோம். இந்நூலை அன்பில் பதிப்பகம் சார்பாக பதிப்பிக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தென்காசி தெற்கு மற்றும் தேனி தெற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 10.05.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | தென்காசி தெற்கு | கோல்டன் ஹால், 23, எல்.எஸ்.கட்டடம் (ஆனைமலை டொயோட்டாவுக்கு எதிரே), பிரதான சாலை, எல்.எஸ்.நகர், குத்துக்கல்வலசை. |
| 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | தேனி தெற்கு | அழகர் திருமண மண்டபம், தேனி – மதுரை ரோடு, கொண்டம நாயக்கன்பட்டி, ஆண்டிப்பட்டி. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 06-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---

## விழுப்புரம் தெற்கு மாவட்டம்

# காணை தெற்கு, காணை வடக்கு - கோலியனூர் மேற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **“தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு”** ஆலோசித்து எடுத்த முடிவின்படி

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் உள்ள காணை தெற்கு, காணை வடக்கு மற்றும் கோலியனூர் மேற்கு ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகள் மறுசீரமைக்கப்படுகிறது;

**காணை வடக்கு ஒன்றியம்**

காணை வடக்கு ஒன்றியத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரியலூர் திருக்கை மற்றும் கக்கனூர் ஆகிய இரண்டு ஊராட்சிகள் காணை தெற்கு ஒன்றியத்துடன் இணைக்கப்படுகிறது. காணை வடக்கு ஒன்றியமானது மீதமுள்ள 14 ஊராட்சிகளுடன் தொடர்ந்து செயல்படும்.

**கோலியனூர் மேற்கு ஒன்றியம்**

கோலியனூர் மேற்கு ஒன்றியத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 7 **ஊராட்சிகள் தனி ஒன்றியமாக விழுப்புரம் தெற்கு மாவட்டத்திலேயே தொடர்ந்து** செயல்படும்.

அத்துடன், **கோலியனூர் மேற்கு ஒன்றியத்தில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 8 ஊராட்சிகள் கோலியனூர் மத்திய ஒன்றியமாக விழுப்புரம் மத்திய** மாவட்டத்தில் செயல்படும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 06.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# “நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு” கழக ஆட்சியின் சாதனை விளக்க தொடர் பொதுக்கூட்டங்கள்!

### மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!



தமிழ்நாடு மக்கள் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில் ”எல்லோர்க்கும் எல்லாம்” என்ற திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி, நாடே பார்த்து வியக்கும் வகையில் நான்கு ஆண்டுகளில் ஈடில்லா சாதனைகளை படைத்து இந்தியாவின் நெம்பர்- 1 முதல்வர் என்ற வரலாற்று சரித்திரத்தை படைத்து, நல்லாட்சி நடத்தி வரும் “மக்களின் முதல்வர்” நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்பு தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழ் இனத்திற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்காகவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை மக்களுக்கு விளக்கிடும் வகையில்

”நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு” என்ற தலைப்பில் கடலூர் மேற்கு மாவட்டத்தில் மே மாதம் 08-ம் தேதி முதல் மே 12-ம் தேதி வரை கீழ்கண்ட ஒன்றிய கழக, நகர கழகங்களில் கீழ்கண்ட தேதிகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படி சிறப்பு பேச்சாளர்களை கொண்டு நடத்தப்பட உள்ளது.

| நாள் | சட்டமன்ற தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் (ஒன்றியம் & நகரம்) | சிறப்பு பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| 8.5.2025 (வியாழன்) | திட்டக்குடி தொகுதி | மங்களூர் கிழக்கு – தொழுதூர் பேருந்து நிலையம் | தேவபாலன் |
| | நெய்வேலி தொகுதி | பண்ருட்டி தெற்கு – காடாம்புலியூர் பேருந்து நிலையம் | பெரம்பலூர் மு.விஜயரத்தினம் |
| | விருத்தாசலம் தொகுதி | கம்மாபுரம் கிழக்கு – கொல்லிருப்பு | புத்தூர் இரா.அசோகன் |
| 9.5.2025 (வெள்ளி) | திட்டக்குடி தொகுதி | மங்களூர் தெற்கு – மங்களூர் கலைஞர் திடல் | வண்ணை. அரங்கநாதன் |
| | நெய்வேலி தொகுதி | குறிஞ்சிப்பாடி மேற்கு – நெய்வேலி ஆர்ச்கேட் எதிரில் | கவிஞர் சல்மா |
| | பண்ருட்டி தொகுதி | நெல்லிக்குப்பம் நகரம் – கலியபெருமாள் தெரு, மந்தக்கரை | வாகை சந்திரசேகர் |
| | விருத்தாசலம் தொகுதி | கம்மாபுரம் மேற்கு – இருளக்குறிச்சி கலைஞர் திடல் | கு.வாஞ்சிநாதன் |
| 10.5.2025 (சனி) | திட்டக்குடி தொகுதி | நல்லூர் தெற்கு – முருகன்குடி கலைஞர் திடல் | பெரம்பலூர் மு.விஜயரத்தினம் |
| | நெய்வேலி தொகுதி | நெய்வேலி நகரம் – வட்டம்– 25, எட்ரோடு திடல் | புத்தூர். இரா.அசோகன் |
| | விருத்தாசலம் தொகுதி | நல்லூர் வடக்கு ஒன்றியம், நல்லூர் அண்ணா திடல் | சி.ஆறுமுகம் |
| | விருத்தாசலம் தொகுதி | விருத்தாசலம் நகரம் – வானொலி திடல், விருதை. | ஏ.கே.எஸ்.விஜயன், வீ.வேல்முருகன் |
| | பண்ருட்டி தொகுதி | பண்ருட்டி நகரம் – இந்திராகாந்தி சாலை, பேருந்து நிலையம் பின்புறம் பண்ருட்டி | சி.ஆறுமுகம் |
| 11.5.2025 (ஞாயிறு) | திட்டக்குடி தொகுதி | மங்களூர் வடக்கு – மா.புடையூர், பெரியார் திடல் | கவிஞர் மனுஷ்யபுத்திரன், க.செல்வமணி |
| | பண்ருட்டி தொகுதி | பண்ருட்டி வடக்கு – வீரப்பார், அண்ணா திடல் | கவிஞர் சல்மா, ந.சத்தியபிரியன் |
| | விருத்தாசலம் தொகுதி | விருத்தாசலம் வடக்கு – காட்டுப்பரூர் கலைஞர் திடல் | வாகை சந்திரசேகர், முல்லைவேந்தன் |
| 12.5.2025 (திங்கள்) | திட்டக்குடி தொகுதி | திட்டக்குடி நகரம் – பெரியார் வீதி, அண்ணா திடல் | பெரம்பலூர் மு.விஜயரத்தினம், தி.எபினாமேரி |
| | பண்ருட்டி தொகுதி | அண்ணா கிராமம் – பாலூர் கடைவீதி | புத்தூர். இரா.அசோகன் |
| | விருத்தாசலம் தொகுதி | சாத்துக்குடல் – பெரியார் திடல் | சி.ஆறுமுகம், |

எனவே மேற்கண்ட நிகழ்ச்சி நிரலின் படி நடைபெற உள்ள கழக அரசின் நான்கு ஆண்டு கால சாதனை விளக்க பொதுக்கூட்டங்களில் மாவட்டக்கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுகுழு, உறுப்பினர்கள், ஒன்றிzயகழக, நகரகழக, பேரூர் கழக செயலாளர்கள், கழக அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர் - கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

---

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# “நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு!” என்ற கழக ஆட்சியின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் !

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, திராவிட மாடல் நல்லாட்சியில் வரலாற்று சிறப்பு மிக்க சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் “நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் இது பல்லாண்டு!” என்ற தலைப்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர மற்றும் பகுதி கழகங்களில் கீழே குறிப்பிட்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

| நாள் & நேரம் | சட்டமன்றத் தொகுதி | கழக அமைப்பு (ஒன்றியம்/நகரம்/பகுதி) | பேச்சாளர்கள் | இடம் |
|---|---|---|---|---|
| 08.05.2025 மாலை 4.00 மணி | கன்னியாகுமரி | தோவாளை வடக்கு ஒன்றியம் | உடன்குடி தனபால் | அழகியபாண்டியபுரம், வனத்துறை அலுவலம் அருகில் |
| 08.05.2025 மாலை 5.00 மணி | நாகர்கோவில் | நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி | மோ.அன்பழகன் | பெருவிளை, முருகன் கோவில் சந்திப்பு |
| 08.05.2025 மாலை 5.30 மணி | நாகர்கோவில் | இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றியம் | பரணி ஆர்.சேகர் | இராஜாக்கமங்கலம் சந்திப்பு |
| 08.05.2025 மாலை 6.00 மணி | குளச்சல் | குளச்சல் நகரம் | எஸ்.மகாராஜன் | குளச்சல், அண்ணாசிலை அருகில் |
| 09.05.2025 மாலை 5.30 மணி | கன்னியாகுமரி | இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியம் | மோ.அன்பழகன் | ஈத்தாமொழி சந்திப்பு |
| 09.05.2025 மாலை 6.00 மணி | நாகர்கோவில் | நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன் | கோட்டார், கம்பளம், ரயிலடி திடல் |
| 10.05.2025 மாலை 5.30 மணி | கன்னியாகுமரி | தோவாளை கிழக்கு ஒன்றியம் | எஸ்.மகாராஜன் | ஆரல்வாய்மொழி, குமாரபுரம் சந்திப்பு |
| 10.05.2025 மாலை 5.30 மணி | குளச்சல் | குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் | உடன்குடி தனபால் & விஜயராஜா (இளம் பேச்சாளர்) | வெள்ளமோடி கிங்ஸ் கார்டன் |
| 11.05.2025 மாலை 5.30 மணி | கன்னியாகுமரி | அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் | மோ. அன்பழகன் | சுசீந்திரம், கற்காடு அம்பேத்கர் சிலை அருகில் |
| 11.05.2025 மாலை 5.30 மணி | குளச்சல் | குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் | செந்தூர் ஜெ. பாலகிருஷ்ணன் | திங்கள்நகர் பேருந்து நிலையம் அருகில் |
| 11.05.2025 மாலை 6.00 மணி | நாகர்கோவில் | நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி | உடன்குடி தனபால் | தெங்கம்புதூர் சந்திப்பு |
| 12.05.2025 மாலை 5.00 மணி | கன்னியாகுமரி | அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் | எஸ். மகாராஜன் & விஜயராஜா (இளம் பேச்சாளர்) | மருங்கூர், வேப்பமூடு சந்திப்பு |
| 12.05.2025 மாலை 5.30 மணி | குளச்சல் | தக்கலை தெற்கு ஒன்றியம் | வி.பாலசுப்பிரமணியன் | முளகுமூடு சந்திப்பு |
| 12.05.2025 மாலை 6.00 மணி | நாகர்கோவில் | நாகர்கோவில் மாநகர வடக்கு பகுதி | உடன்குடி தனபால் | நாகர்கோவில், பென்சாம் மருத்துவமனை அருகில் |

ஆகவே, இந்த சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்களில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மேயர் ரெ.மகேஷ்**
செயலாளர் - கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க.